முருகப்பெருமான் துணை

**மகான் மாலாங்கன் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.06.2022**, வியாழக்கிழமை

1. ஏழைக்கு இறங்கும் அப்பனே
ஏழ்மை பசிபிணி விரட்டவே
சளைக்கா மாதருமம் செய்து
சற்குருவாய் வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது விடைதிங்கள்
வரங்களென மூவாறோர்திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 19 ம் நாள், 02.06.2022 வியாழக்கிழமை)
வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே மாலாங்கன் யானும்
தரணியே பாதுகாப்புற உரைப்பேன்
மண்ணுலகை சுற்றி அரங்கன்
மாதவபலத்தை தருமமாக்கி
4. ஆக்கியே அறம் வேலியிட்டு
ஆற்றல்பட காத்து வருக
தேக்கமின்றி அரங்கன் தரும்
தெய்வீக நெறி முழுமைபட
5. முழுமைபட எங்கும் ஏற்கப்பட
மொழிகுவேன் உலக மாற்றம்
வழுவாது அரங்கன் ஆசிபட
வந்தடையும் சடுதி கலியில்
6. கலியின் பிடிகள் அனைத்தையும்
கந்தவேலன் துதி பாடி
அழிவினின்று காக்கும் முகமாக
அரங்கனோ சரவணசோதி ஏற்றி
7. ஏற்றி மக்களிடை பற்றும்
எல்லா மாயைகளையும் விரட்ட
பற்றுக்கொண்டு கலிவாழ் மக்கள்
பணிந்து அரங்கனை அணுகி
8. அணுகி சரணடைவு காண
அறம்தனை வேதமாக ஏற்று
அணுகி தான தருமம் தொடர
அவரவர்க்கும் அழியாமை எனும்
9. எனும் உயர் சக்தி பரவி
எல்லலோரும் மாயை வென்று
ஞானவான்கள் ஆவர் என்பேன்
ஞாலமதில் எல்லா மாற்றமும் தரவல்ல

10. தரவல்ல ஞானிகளாகி இனிதே
தரணியை ஆபத்தின்றி பாதுகாப்பர்
அறம் வழி ஞான ஆட்சி மலர
அவையில் ஞானவான்கள் பெருகி

11. பெருகியே உலகப் பெருமாற்றம்
பெருந்தயவாக ஆறுமுகன் அவதார
ஆறுமுக அரங்கனால் நடக்கும்
அறிவித்த அருளாசி முற்றே

–சுபம்–